# தமிழகம் ஏன் எமர்ஜென்சியை எதிர்க்கவில்லை ? இனி வந்தாலும் எதிர்க்குமா?

ரோம் நகரம் தீப் பற்றி எரிந்தபோது மன்னன் நீரோ வயலின் வாசித்த கதை போல, நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட அன்று நான் ஆல் இந்தியா ரேடியோ நிகழ்ச்சிக்கான இசைப் பயிற்சியில் பாங்கோஸ் டிரம்ஸ் வாசித்துக் கொண்டிருந்தேன்.

அப்போது எனக்கு வயது 21. எழுத்தாளனாக, பத்திரிகையாளனாக ஆவதுதான் என் லட்சியமாக பள்ளி நாளிலிருந்தே இருந்தது. இந்தியன் எக்ஸ்பிரசில் என் அப்பா மூத்த பத்திரிகையாளராக இருந்தார். ஆனால் அங்கே எனக்கு வேலை கிடைப்பது கடினமாக இருந்தது. காரணம் அப்பாதான். அவர் நிர்வாகத்துக்கும் வேண்டாதவராக இருந்தார். தொழிலாளர்களுக்கும் வேண்டாதவராக இருந்தார். காரணம் ஒரு வேலை நிறுத்தம். பத்திரிகையாளன் என்பவன் வேலை நிறுத்தமே செய்யக் கூடாது, வாசகர்களுக்கு எப்போதும் செய்தி தருவதே அவன் கடமை என்பது அப்பாவின்

கொள்கை. அவர் நேரு சோஷலிச அபிமானி. ஐம்பதுகளில் நடந்த ஒரு வேலை நிறுத்தத்தின்போது வேலை செய்த மிக சிலரில் அப்பாவும் ஒருவர். வேலை நிறுத்தம் முடிந்ததும், நிர்வாகம் அந்த நாட்களுக்கு சம்பளம் கொடுத்து தொழிலாளர்களுடன் சமரசம் செய்து பிரச்சினையை தீர்த்துக்கொண்டது. ஆனால் அப்பா, தான்வேலை செய்தது வாசகர்களுக்காகத்தானே தவிர நிர்வாகத்துக்காக அல்ல என்றும் நிர்வாகம் தொழிலாளர் பிரச்சினையைக் கையாண்ட விதத்தைக் கண்டித்து தான் அந்த நாட்களுக்கு சம்பளம் வாங்கமுடியாது என்றும் தெரிவித்து இரு தரப்புக்கும் வேண்டடதவரானார். எனவே என்னை நிருபராக உள்ளே விடக் கூடாது என்று அங்கே பலரும் கருதினார்கள். ஒரு வழியாக எனக்கு அங்கே கணக்குப் பிரிவில் கடை நிலை ஊழியன் வேலைதான் தரப்பட்டது. சில மாதங்கள் வேலை செய்துவிட்டு அதிலிருந்து விலகி பல்கலைக்கழகத்தில் இதழியல் டிப்ளமா படிப்பை முடித்துவிட்டு மீண்டும் எக்ஸ்பிரசில் நிருபர் வேலைக்கு விண்ணப்பித்திருந்தேன். தினமும் செங்கல்பட்டிலிருந்து சென்னைக்கு வந்து அந்த அலுவலகம் சென்று என் மனு என்னவாயிற்று என்று விசாரித்தபடி இருந்த காலம் அது. பழைய ஊழியன் என்பதால், அலுவலக தொழிலாளர்கள் அப்போது வானொலியின் தொழிலாளர் நிகழ்ச்சிக்காக தயாரித்துக் கொண்டிருந்த பல்சுவை நிகழ்ச்சியில், என்னையும் இசைக் கலைஞனாக சேர்த்துக் கொண்டார்கள்.

அப்போதெல்லாம் தினசரி காலை எழுந்தது முதல் இரவு படுக்கும் வரை செய்தவை, சந்தித்தவர்கள் பற்றியெல்லாம் ஒரு நோட்டில் டயரி எழுதும் பழக்கம் இருந்தது. 26.6.1975 தேதியிட்ட குறிப்பில் அப்போது நான் எழுதியிருந்தது இதோ : “இன்று இந்திய வரலாற்றில் புதுமை நிகழ்ந்திருக்கிறது. அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டு ஜே.பி,மொரார்ஜி போன்ற எதிர்க்கட்சியினர் *on security grounds* சிறைப்படுத்தப்பட்டிருக்கின்றனர். சரியோ தவறோ, இந்திரா காந்தியின் துணிவை எண்ணி வியந்து பாராட்டுகிறேன்.”

அந்த வியப்பும் பாராட்டும் அடுத்த சில வாரங்களில் கரைந்துவிட்டன. ஜூலை 23 அன்று இந்தியன் எக்ஸ்பிரசில் பயிற்சி நிருபராக என்னை சேர்த்துக் கொண்டார்கள். சேர்ந்த சில நாட்களில் எனக்கு இரவுப் பணி தரப்பட்டது. இரவுப்பணி நிருபரின் வேலைகளில் ஒன்று, பத்திரிகையின் பக்கங்களை தணிக்கை அதிகாரியிடம் எடுத்துச் சென்று கொடுத்து ஒப்புதல் வாங்கிவருவதாகும். நுங்கம்பாக்கம்

ஹாடோஸ் சாலையில் இருக்கும் மத்திய அரசு அலுவலகமான சாஸ்திரி பவனில்தான் தணிக்கை அதிகாரிகளும் இருந்தனர். பிரஸ் இன்ஃபர்மேஷன் பீரோ என்ற பெயரில் மைய அரசின் தகவல்களை மீடியாவுக்கு தெரிவிப்பதற்காக இருந்த அலுவலர்களே, இப்போது தணிக்கை அதிகாரிகளாக்கப்பட்டிருந்தனர்.

சென்னை வானொலியில் செய்தி ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்ற சௌமிய நாராயணன் என்ற மூத்த செய்தியாளர்தான் தலைமை தணிக்கை அதிகாரி. இரவு 9 மணி முதல் விடியற்காலை 3 மணி வரை ஒவ்வொரு பக்கமாக எடுத்துச் சென்று அவரிடம் ஒப்புதல் கையெழுத்து பெற்று திரும்பவேண்டும். தற்போதைய எக்ஸ்பிரஸ் அவென்யூ மால் இருக்கும் இடம்தான் எங்கள் அலுவலகம். அங்கிருந்து சாஸ்திரி பவன் சென்று திரும்ப அலுவலகத்தில் கார் தரமாட்டார்கள். 9 மணிக்கு மேல் ஆட்டோ கிடைக்காது. அலுவலகத்தில் பத்திரிகைக் கட்டுகளை எடுத்துச் செல்ல இருக்கும் வேன்களில்தான் சென்று வருவோம். வேனில் டிரைவருக்குப் பக்கத்தில் முன்னிருக்கையில், வழியில் இறங்கி வீடு செல்வதற்காக, யாரேனும் உயர் அலுவலர் வந்து உட்கார்ந்துவிடுவார்கள். நான் காலி வேனில் உட்பக்கம் எந்தப் பிடிப்பும் இல்லாமல் தடுமாறிக் கொண்டுதான் செல்லவேண்டியிருக்கும். தணிக்கையும் என்னைப் போல தடுமாற்றத்தில்தான் இருந்தது.

தணிக்கை அதிகாரி முரசொலி, துக்ளக் இரண்டின் மீதே அதிக கவனத்தில் இருந்தார். அவற்றில் ஒவ்வொரு வரிக்கும் வேறு ஏதாவது அர்த்தம் இருக்குமா என்று ஆராய்வார். எக்ஸ்பிரசைப் பொறுத்தமட்டில் அவருக்கு டெல்லி தலைமை அலுவலகத்திலிருந்தே அதில் எதையெல்லாம் வெட்ட வேண்டும் என்ற தகவல் வந்துவிடும். அதில் சொல்லாதவை இருந்தால் அவர் கவனிக்கமாட்டார். அப்படிப் பல செய்திகள் தப்பியிருக்கின்றன.

ஒரு செய்தியை நீக்கினால் அந்த இடத்தை காலியாக விடக் கூடாது என்று வற்புறுத்தினார்கள். தணிக்கை செய்யப்பட்டிருப்பது வாசகருக்குத் தெரியக் கூடாது என்பதே நோக்கம்.

சில வாரங்களுக்குப் பின் கடைசி பக்கத்துக்கு ஒப்புதல் அளிப்பதை தாமதப்படுத்தத் தொடங்கினார்கள். இரவு 3 மணிக்கு அச்சாகத் தொடங்கினால்தான் காலை 6 மணி முதல் 7 மணிக்குள் எல்லா ஊர்களிலும் பேப்பர் விற்பனைக்குக் கிடைக்கும். 6 மணிக்குதான் கையெழுத்திடுவேன். நீ இப்படியே ஓரமாப் படு என்பார் அதிகாரி. 6

மணிக்கு மேல் அச்சிட்டு பேப்பரை விநியோகித்தால் அது கடைக்கும் வீட்டுக்கும் 10 மணிக்கு மேல்தான் வரும். காலை பேப்பரை யார் அந்த வேளையில் வாங்குவார்கள் ? விற்கமுடியாமல் பேப்பரை திவாலாக்கி முடக்குவதுதான் அரசின் சதி திட்டம்.

லேட்டா வருவேன் என்று அலுவலகத்துக்கு போன் செய்து சொல்லிவிடட்டுமா என்று கேட்பேன். சொல்லு என்பார். அப்போதெல்லாம் செல்போன் இல்லாத காலம். அவர் மேசையில் இருக்கும் போனில் என் இரவு நேர செய்தி ஆசிரியரை அழைத்து தகவல் சொல்வேன். எங்களுக்குக்குள் சில சங்கேத சொற்கள் வைத்திருந்தோம். இன்று வெட்டு எதுவும் இல்லை என்பதற்கு ஒரு சொல். வெட்டு இருக்கலாம் என்பதற்கு இன்னொரு சொல். வெட்டு இல்லை என்ற தகவல் கிடைத்ததும் உடனே பேப்பரை அச்சிட்டுவிடுவார்கள். தணிக்கை அதிகாரி இங்கே கையெழுத்திடும்போதே கடையில் பேப்பர் கிடைத்துவிடும்.

இப்படி சில வாரங்கள் ஏமாற்றினோம். அதன்பின் விழித்துக் கொண்டார்கள். தணிக்கை அலுவலகத்திலிருந்து என் அலுவலகத்துக்கு போன் செய்ய அனுமதி மறுக்கப்பட்டது.

ஓரிரு மாதங்களில் பத்திரிகையின் தன்மையே மாறத் தொடங்கியது. சென்சாருக்கு வேலை இல்லாத சூழல் ஏற்பட்டது. பத்திரிகையில் அரசியல் செய்திகள் குறைந்தன. நெருக்கடி நிலையில் திட்டமிடப்படாமல் இதழியலில் நடந்த முக்கியமான ஆக்கப் பூர்வமான மாற்றமென்றே இது இப்போது எனக்கு தோன்றுகிறது. சாலை வசதி, குடி நீர் , சாக்கடை பிரச்சினைகள், அன்றாட வாழ்க்கையில் மக்கள் சந்திக்கும் பல்வேறு சிக்கல்கள் பற்றியெல்லாம் செய்திகள், கட்டுரைகள் வெளியிடத் தொடங்கினோம். எமர்ஜென்சிக்கு முன்னர் இதையெல்லாம் ஒரு முக்கியச் செய்தியாக பத்திரிகைகள் பெரிதாகக் கருதியதே இல்லை. அரசியல்வாதிகள், அதிகாரிகள், நடிகர்கள், வணிகர்கள் சொல்பவை மட்டுமே பெரிய செய்திகளாக கருதப்பட்டிருந்தன.

ஒவ்வொரு நாளும் ஒரு முழுப்பக்கம் இப்படிப்பட்ட செய்திகளுக்காக இப்போது ஒதுக்கப்பட்டது. நான் சென்னையில் இருக்கும் சுமார் 30 சுடுகாடுகள், இடுகாடுகளுக்கு பகலிலும் இரவிலும் சென்று வந்து, அங்கே இறுதிச் சடங்குக்கு செல்லும் மக்களின் பிரச்சினைகள், வெட்டியான்களின் வாழ்க்கைத்தரம் பற்றியெல்லாம் எழுதினேன். கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனையில் உள்நோயாளிகளாக

இருப்போரில் பாதி பேர் குணமானபின்னரும், குடும்பத்தினர் கைவிட்டதால் போக இடம் இன்றி அங்கேயே இருக்கவேண்டிய அவலம் பற்றி விரிவாக எழுதினேன்.

இந்திய இதழியலின் முகத்தையே எமர்ஜென்சி பலவிதங்களில் மாற்றியமைத்துவிட்டது. அடுத்த பத்தாண்டுகளில் மிகப் பெரிய செய்திப் பத்திரிகைப் பெருக்கம் ஏற்பட்டது. முதலில் ஆங்கிலத்தில். அடுத்து தமிழ் உட்பட இந்திய மொழிகளில். மனித உரிமைகள் முதல் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகள் வரை பத்திரிகைகளில் முக்கிய இடம் பெறத் தொடங்கின. தொண்ணூறுகள் வரை நீடித்த இந்த மாற்றத்தை மறுபடியும் வேறு திசைக்கு புதிய பொருளாதாரக் கொள்கை திருப்பிவிட்டது.

நெருக்கடி நிலையின்போது வட இந்தியாவில் சாதாரண மக்கள், குறிப்பாக சிறுபான்மையினர் கடுமையாக பாதிக்கப்பட்டது போல தமிழகத்தில் பாதிப்பு ஏற்படவில்லை. இங்கே காங்கிரசில் ஒரு சஞ்சய் காந்தி இல்லாததே அதற்குக் காரணம். இங்கே கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள் எல்லாரும் அரசியல் செயல்பாட்டாளர்கள் மட்டுமே. தி.மு.க, மார்க்சிஸ்ட், நக்சல்பாரி இயக்கங்கள், திராவிடர் கழகம், பழைய காங்கிரஸ், ஆர்.எஸ்.எஸ். முதலியவற்றின் தலைவர்களும் ஊழியர்களுமே குறி வைத்து ஒடுக்கப்பட்டனர்.

இவர்களெல்லாம் ஒடுக்கப்பட்டதும், பல சிறைக் கொடுமைகள் நடந்ததும் கூட, பொது மக்களுக்கு நெருக்கடி நிலைக் காலம் முடிந்தபின்னரே, மெல்ல மெல்ல தெரிய வந்தன. நெருக்கடி நிலை முடிந்து ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் ஜனதா அரசு நியமித்த ஷா கமிஷன், அதன் தமிழகக் கிளையான அனந்த நாராயணன் கமிஷன், சென்னை சிறைக் கொடுமைகள் பற்றி விசாரித்த இஸ்மாயில் கமிஷன் முதலியவற்றின் விசாரணைகளில்தான் எல்லா கொடுமைகளும் வெளிப்பட்டன. இந்த எல்லா விசாரணைகளையும் நான் தினசரி சென்று கவனித்து இந்தியன் எக்ஸ்பிரசில் அன்றாடம் செய்திகள் எழுதும் வாய்ப்பு கிடைத்தது. அந்த கமிஷன்கள் முன்பு வழக்கறிஞர்களாகப் பணியாற்றிய (பின்னாள் நீதிபதி) கே.சந்துரு, பாளை சண்முகம், கி.வீரமணி ஆகியோரின் அயராத பணி, பல கொடுமைகள் வெளிவரக் காரணமாக இருந்தது.

நெருக்கடி நிலை முடிந்த மூன்று வருடங்களில் ஜனதா ஆட்சி கவிழ்ந்தது. தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் என்மீது பொய்ப் புகார் சுமத்தி என்னையும் எக்ஸ்பிரஸ் நிர்வாகம் வேலை

*நீக்கம் செய்தது. (அடுத்த நான்காண்டுகள் அதற்காக நான் நடத்திய வழக்கில் நண்பர் சந்துரு வாதாடி எனக்கு வெற்றி தேடிக் கொடுத்தார்; ஆனால் நான் ஆங்கில இதழியலில் தொடராமல் தமிழ் எழுத்தாளனாகிவிட்டேன் என்பதெல்லாம் தனிக்கதை.)*

*சுமார் 19 மாதங்கள் நீடித்த நெருக்கடி நிலை முடிந்து 40 ஆண்டுகள் ஆகும் இந்த வேளையில் சில முக்கியமான கேள்விகளை நாம் கேட்டுக் கொள்வதும் அவற்றுக்கான பதில்களைத் தேடுவதும் அவசியம் என்று கருதுகிறேன். இல்லாவிட்டால் வரலாற்றிலிருந்து எதையும் கற்கமுடியாது.*

**முதல் கேள்வி: இந்திரா காந்தி ஒரு ஃபாசிஸ்ட்டா ?**

**2**

*எமர்ஜென்சி இன்றும் நம் மனங்களில் எழுப்பும் முதல் கேள்வி அது: இந்திரா காந்தி ஒரு ஃபாசிஸ்ட்டா ?*

*இல்லை என்பதே என் முடிவு. அவர் ஒரு ஃபாசிஸ்ட்டாக இருந்திருந்தால், 19 மாதம் கழித்து தேர்தலை அறிவித்திருக்க மாட்டார். தொடர்ந்து இன்னும் பல வருடம் அப்படியே அவர் ஆட்சி நடத்தியிருக்க முடியும். ஆனால் அவர் செய்யவில்லை. தவறான ஆலோசனையை நம்பி அவர் தேர்தலை அறிவித்ததாக சிலரால் சொல்லப்படுகிறது. இருக்கலாம்; அவர் நெருக்கடி நிலையை அறிவித்ததும் அதே போல தவறான ஆலோசனைப்படியாகவே இருக்கமுடியும். மிகக் கடுமையான ஓர் அரசியல் சிக்கலை சமாளிக்க, அவருக்கு உடன் இருந்த நெருக்கமான ஆலோசகர்கள் அதிகாரிகள் அளித்த தவறான அறிவுரையை, அவர் பின்பற்றினார் என்றே தோன்றுகிறது. ஜனதா கட்சி ஆட்சி நடத்த முடியாத சூழலை ஆர்.எஸ்.எஸ் ஏற்படுத்தி அந்த ஆட்சி கவிழ்ந்து 1980ல் இந்திரா மீண்டும் ஆட்சிக்கு வந்தபின், அடுத்த நான்காண்டுகளில் அவர் 1974ல் சந்தித்ததை விட மிகப் பெரிய சவால்களுக்கு ஈடு கொடுக்க வேண்டி வந்தது. அசாமில் அந்நியர்களுக்கெதிரான இயக்கமும், பஞ்சாபில் தனி காலிஸ்தானுக்கான இயக்கமும் இந்திராவுக்கு பெரிய தலைவலிகளாக இருந்தவை. 1974ல் குஜராத்திலும் பீஹாரிலும் நடந்த எழுச்சியை விட மிகப் பெரியவை. அப்போதை விட அடிக்கடி கலவரமும் வன்முறையும் நிகழக் கூடியவையாகவும் இருந்தன. ஆனால் அவர் இம்முறை நாடு தழுவிய நெருக்கடி நிலையை அறிவிக்கவில்லை.*

**அப்படியானால் நெருக்கடி நிலைக்குப் பின்னால் இருந்த அரசியல்தான் என்ன ?**

*அதில் உள்ளூர் அரசியலும் இருக்கிறது. உலக அரசியலும் இருக்கிறது. (இன்றைய ஈழத் தமிழர் பிரச்சினையைப் போலவே.) காங்கிரஸ் கட்சி பிளவுபட்டு 1971 தேர்தலில் இந்திராவின் காங்கிரஸ் மாபெரும் வெற்றியை அடைந்தது. இந்திராவை எதிர்த்த பெரும் தலைவர்கள் எல்லாரும் படு தோல்வியடைந்தனர். ஆனால் குஜராத்திலும் பீஹாரிலும் இந்திரா அரசுக்கு எதிரான மாணவர் தொழிலாளர் இயக்கங்கள் வலுவடைந்தன. இந்த எழுச்சியால் உற்சாகமடைந்த ஜெயப்பிரகாஷ் நாராயண், போலீசும் ராணுவமும் கூட அரசின் தவறான உத்தரவுகளை மதிக்கத் தேவையில்லை என்று, காந்தியை மேற்கோள் காட்டி அறைகூவல் விடுத்தார். இந்திராவின் அலகாபாத் தேர்தல் செல்லாது என்று ராஜ்நாராயண் தொடுத்த வழக்கில், அரசு ஊழியர் யஷ்பாலை இந்திரா தேர்தல் பணிக்கு பயன்படுத்திய முறைகேட்டுக்காக, அவர் வெற்றி செல்லாது என்ற தீர்ப்பு வந்த மறு வாரமே அவசர நிலை அறிவிக்கப்பட்டது.*

*இன்னொரு பக்கம் ஜெயபிரகாஷ் தலைமையின் கீழ் ஒன்றிணைந்த சக்திகள், அவற்றை ஆதரித்த சக்திகள் யார் யார் என்று பார்க்க வேண்டும். இந்துத்துவ வலதுசாரி சக்தியான ஜனசங்கம், நேரு காலத்திலிருந்தே காங்கிரஸை எதிர்க்கும் சோஷலிஸ்ட்டுகள், மார்க்சிஸ்ட்டுகள், காங்கிரசுக்குள் இந்திராவின் இடது சாரிப் போக்கை எதிர்த்த மொரார்ஜி, நிஜலிங்கப்பா இவர்களோடு தமிழகத்தில் சோஷலிஸ்ட்டாகக் கருதப்பட்ட காமராஜர் முதலிய வலதுசாரிகள் ஒன்றிணைந்தனர்.*

*1969 முதல் 1971க்குள் ராஜமான்ய ஒழிப்பு, வங்கி தேசியமயம் முதலிய சோஷலிச திட்டங்கள் இந்திராவால் நிறைவேற்றப்பட்டன. எல்லாவற்றுக்கும் மேலாக சோவியத் யூனியனுடன் இந்தியா போட்ட பாதுகாப்பு ஒப்பந்தம் மிக முக்கியமானது. 1971 தேர்தலில் ஜெயித்த ஒரே மாதத்தில் இந்திரா வங்க தேச விடுதலைப் போரை ஆதரித்து இந்தியப் படைகளை அனுப்பி வங்க தேசத்தை உருவாக்கினார். இதை சோவியத் யூனியன் ஆதரித்தது. அத்துடன் நீண்ட காலப் பனிப்போர் நடத்தி வந்த அமெரிக்கா எதிர்த்தது. இந்தியாவை மிரட்ட இந்து மாக்கடலுக்குள் தன் செவன்த் ஃப்ளீட் கடற்படையை அமெரிக்கா அனுப்பியது.*

*அமெரிக்க சார்புள்ள வலதுசாரி சக்திகளையும், தீவிர இடதுசாரி சக்திகளையும் சமாளிக்க நெருக்கடி நிலைதான் ஒரே வழி என்று தவறாக இந்திராவின் ஆலோசகர்கள் கூறியதையடுத்தே நெருக்கடி நிலையை இந்திரா அறிவித்தார் என்பதில் சந்தேகமில்லை. இந்தச் சூழலைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டவர்கள் ஆர்.எஸ்.எஸ் மட்டும்தான். அவர்களில் ஒரு பிரிவினர் நெருக்கடி நிலை எதிர்ப்பு என்ற பெயரில் அமைப்புக்கு, அடிமட்டத்தில் இணைப்புகளை ஏற்படுத்தும் இயக்க வேலையிலும், இன்னொரு பிரிவினர் நெருக்கடி நிலையையே தங்கள் நோக்கத்துக்குப் பயன்படுத்துவதிலும் ஈடுபட்டனர். சஞ்சய் காந்தியின் அன்றைய முக்கிய ஆலோசகராகவும் டெல்லி லெப்டினண்ட் கவர்னராகவும் இருந்தவர் ஜக்மோகன். முஸ்லிம்களுக்கு கட்டாய குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை நடவடிக்கைகளும், டெல்லி துருக்மான் கேட் பகுதி முஸ்லிம் குடியிருப்புகளான குடிசைப் பகுதிகளை இடித்து தரைமட்டமாக்கியதும் ஜக்மோகன் மேற்பார்வையில்தான் நடந்தன. பின்னால் இதே ஜக்மோகன் காஷ்மீர் ஆளுநராகி அங்கே பல ஒடுக்குமுறைகளில் ஈடுபட்டவர். ராஜீவ் காந்தியின் காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்தபோது பி.ஜே.பியில் சேர்ந்து வாஜ்பாயி அரசில் அமைச்சரானார். சஞ்சய் காந்தியுடன் நெருக்கமாக இருந்த பலர் ஆர்.எஸ்.எஸ், பி.ஜே.பியிலிருந்து வந்தவர்கள் என்று சந்தேகிக்க இடமிருக்கிறது. சஞ்சயின் மனைவி மேனகாவும் மகன் வருண் காந்தியும் இன்றும், நெருக்கடி நிலையின் 40ம் வருட நினைவைக் கொண்டாடும் பி.ஜே.பி.யில்தான் இருக்கிறார்கள்.*

*ஆர்.எஸ்.எஸ் தலைவர் பாலாசாஹிப் தேவரஸ் இந்திராவுக்கு சிறையிலிருந்து அனுப்பிய கடிதத்தில் ஆர்.எஸ்.எஸ் நெருக்கடி நிலையை ஆதரிக்கிறது என்றும் தங்களை விடுவிக்கும்படியும் கோரினார். வாஜ்பாயி சிறையிலிருந்து பரோலில் விடுவிக்கப்பட்டு வீட்டுக் காவலில்தான் இருந்தார்.*

*அமெரிக்க ஆதரவு பெற்ற வலதுசாரி சக்திகளுக்கு எதிராக செயல்படுவதாகக் கருதி இந்திரா கொண்டு வந்த நெருக்கடி நிலை, நேர் எதிராக எதிர்காலத்தில் இந்தியாவில் தேர்தல் அரசியலில் வலதுசாரி சக்திகள் பலம் பெறுவதற்கே பயன்பட்டது. நெருக்கடி நிலைதான் ஜனசங்கத்துக்கு அரசியலில் கூட்டாளிகளும் மரியாதையும் ஏற்படக் காரணமாக இருந்தது. ஒன்றிணையவேண்டிய இடதுசாரிகள், நெருக்கடி பற்றிய எதிரெதிர் கருத்துகளினால் மேலும் பிரிந்தார்கள்.*

இன்றுவரை ஒருவர் மீது மற்றவர் பரஸ்பர சந்தேகத்துடனே இயங்குகின்றனர். நெருக்கடி நிலையில் உண்மையில் மிகவும் பாதிக்கப்பட்ட கட்சிகள் அகாலி தளமும், தமிழகத்தில் தி.மு. கவும்தான்.

**தி.மு.க பாதிக்கப்பட்டது என்றால் ஏன் தமிழக மக்கள் அப்போது நெருக்கடி நிலையை எதிர்க்கவில்லை? 1971 தேர்தலில் தி.மு. கவைத்தானே மக்கள் பெருவாரியாக ஆதரித்தார்கள்?**

தமிழக மக்கள் நெருக்கடி நிலையை பெரிதாக எதிர்க்கவில்லை என்பது மட்டுமல்ல. 1977 தேர்தலில் வட இந்தியா முழுவதும் இந்திராவுக்கெதிராக வாக்களித்து ஜனதாவை ஆதரித்தபோது, தமிழக மக்கள் இந்திராவை ஆதரித்து, ஜனதாவையும் அதை ஆதரித்த தி.மு.கவையும் கடுமையாக நிராகரித்தார்கள். இது ஏன் என்பது நம் ஆய்வுக்குரியது.

காங்கிரஸ் பிளவுக்குப் பின் 1971ல் இந்திரா மக்களவைத் தேர்தலை அறிவித்தபோது, தமிழகத்தில் கலைஞர் கருணாநிதியும் அவையைக் கலைத்து சட்டப் பேரவை தேர்தலை அறிவித்தார். அது மட்டுமல்ல, சோஷலிசக் கருத்துகளுக்கு ஆதரவு என்ற அடிப்படையில் இந்திராவுடன் கூட்டணி அமைத்தார். வெகு புத்திசாலித்தனத்துடன் காங்கிரசுக்கு மக்களவையில் அதிக இடம் கொடுத்துவிட்டு , சட்டப் பேரவை தேர்தலில் ஒரு சீட் கூடக் கொடுக்காமல் காங்கிரசை ஓரங்கட்டினார். அந்தக் கூட்டணிதான் தமிழகத்தில் அந்தத் தேர்தலில் அமோக வெற்றியை பெற்றது. (அப்போது கல்லூரி மாணவர் தலைவராக, தமிழ்ப் பேரவை செயலாளராக இருந்த நான் அந்தத் தேர்தலில் அந்தக் கூட்டணிக்காக என் மாவட்டத்தில் பிரசாரம் செய்தேன்.) 1971லிருந்து 1975க்குள் அப்படி என்ன நடந்தது ?

தி.மு.க வின் ஆட்சியில் எண்ணற்ற ஊழல்களும் அராஜகங்களும் நடந்தன. வீராணம் ஊழல், சர்க்கரை மூட்டை ஊழல், உர மூட்டை ஊழல், கூட்டுறவு பாசன சங்க ஊழல் என்று இவை பற்றிய விவரங்களை நெருக்கடி நிலையின்போது நியமிக்கப்பட்ட சர்க்காரியா கமிஷனின் அறிக்கையில் காணலாம். (எம்.ஜி.ஆரும் கம்யூனிஸ்ட்டுகளும் அளித்த புகார்களில் பலவற்றை சர்க்காரியா போதுமான ஆதாரம் இல்லை என்று நிராகரித்தார். பலவற்றுக்கு தொடர்ந்து வழக்கு தொடுக்க ஆதாரம் இருப்பதாக சுட்டிக் காட்டினார். பலவற்றில் அன்றைய முதலமைச்சருக்கும் அமைச்சர்களுக்கும் பொறுப்பு இருப்பதாகவும், பல உயர் ஐ.ஏ.எஸ்.அதிகாரிகள்

ஊழலுக்கும் அராஜகத்துக்கும் உடன்பட்டதாகவும் சர்க்காரியா சொல்லியிருக்கிறார்.)

மார்க்சிஸ்ட் தொழிற்சங்க தலைவர் வி.பி.சிந்தன் மீதான கொடூரமான கொலை முயற்சி, திருச்சி கிளைவ் விடுதியில் மாணவர்கள் மீது காவல் துறையின் தாக்குதல், பாளையங்கோட்டையில் பேராசிரியர் மீது தாக்குதல், அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் கலைஞருக்கு டாக்டர் பட்டம் அளிப்பதை எதிர்த்த மாணவர்கள் மீதான தாக்குதலில் உதயகுமார் மர்மச் சாவு, அ.தி.மு.க தொண்டர்கள் பூலாவரி சுகுமாரன் முதலானோர் படுகொலை, துக்ளக், அலை ஓசை பத்திரிகைகள் மீது தாக்குதல், சென்னை மாநகராட்சி மஸ்டர் ரோல் ஊழல் என்று பல சம்பவங்கள் தொடர்ச்சியாக நடந்தன.

கட்சியில் தனக்கெதிராக வளர்ந்துவிடக் கூடிய சக்தி என்று எம்ஜிஆரை சரியாகக் கணித்து, அவரை பலவீனப்படுத்த அவரைப் போலவே தன் மகன் மு.க.முத்துவை நடிக்கவைத்து ஸ்டாராக்கவேண்டும் என்று கலைஞர் கருணாநிதி எடுத்த முயற்சிகளால் எம்.ஜி.ஆர். அதிருப்தியடைந்திருந்தார். தன் கட்சி ஆட்சியின் ஊழல் பற்றி பகிரங்கமாகப் பேசத்தொடங்கிக் கலகம் செய்து வெளியேற்றப்பட்டு அ.தி.மு.கவை தொடங்கினார். சட்டமன்றத்தில் அவரைப் பேசவிடாமல் தி.மு.கவினர் செய்த ரகளையில் 'சட்டமன்றம் செத்துவிட்டது' என்று சொல்லி வெளியேறினார்.

அப்போது மக்களிடம் ஏற்பட்டிருந்த அதிருப்திக்கு வடிவம் கொடுத்து அதை திரட்டி வந்தவர் காமராஜர். பல கல்லூரிகளில் மாணவர் இயக்கங்களும் அமைப்புகளும் அவரை ஆதரித்தன. 1969ல் பிரிந்த இந்திராவும் காமராஜரும் 1974ல் மறுபடியும் ஒன்று சேர்ந்தனர். கோவை இடைத் தேர்தல்களிலும், புதுச்சேரி தேர்தலிலும் இரு காங்கிரஸ் கட்சிகளும் கூட்டு சேர்ந்தன. இந்திராவும் காமராஜரும் ஒன்றாகப் பிரசாரம் செய்தனர்.

தி.மு.க ஆட்சிக்கெதிராக காமராஜரும் காங்கிரசும் உருவாக்கி வந்த மக்கள் கருத்தை, எம்.ஜி.ஆர் தனக்கு சாதகமாக்கிக் கொண்டார். தி.மு.க உடைவது நல்லது என்று கருதிய இந்திரா அவரை ஆதரித்தார். ஆனால் காமராஜர் தயக்கத்திலேயே இருந்தார். நெருக்கடி நிலையை அவர் எதிர்த்தபோதும் ஜெயப்பிரகாஷின் இயக்கத்தை ஆதரித்து பெரிதாக எதையும் செய்ய முன்வரவும் இல்லை. நெருக்கடி நிலையின்போது இந்திரா கைது செய்யாமல் விட்ட ஒரே பழைய காங்கிரஸ் மூத்த தலைவர் காமராஜர்

மட்டும்தான். உடல்நலம் குன்றி அவர் காலமானபோது, இந்திரா இறுதிச் சடங்குக்கு வரமாட்டார் என்று கருதப்பட்ட சூழலிலும் வந்து அஞ்சலி செலுத்தினார்.

இப்படி தமிழகத்தில் 1975-76ல் நெருக்கடி நிலை அமலாகி தி.மு.க ஆட்சி கலைக்கப்பட்டபோது பெருவாரியான பொது மக்கள் மனநிலை என்பது தி.மு.க ஆட்சிக்கெதிரானதாகவே இருந்தது. இங்கே காங்கிரசின் சஞ்சய் காந்தி பாணி அராஜகங்களும் மக்களிடையே நிகழாத சூழலில் நெருக்கடி நிலைக்கு (நியாயமாக எழவேண்டிய) எதிர்ப்பு இருக்கவில்லை.

அடுத்தடுத்த தேர்தல் முடிவுகளைப் பார்த்தால், தமிழக மக்கள் என்ன நினைத்தார்கள் என்பது புரியும்.

**3.**

**தி.மு.க எதிர்ப்பு மனநிலைதான் மக்களிடம் தமிழகத்தில் 1975ல் பெரிதாக இருந்ததே தவிர நெருக்கடி நிலை எதிர்ப்பு மன நிலை இருக்கவே இல்லை என்பது எப்படி தேர்தல்களில் பிரதிபலித்தது?**

இது 1977ல் மக்களவைத் தேர்தலில் மிகத் துல்லியமாகத் தெரிந்தது. ஜனதாவும் அதை ஆதரித்த தி.மு.கவும் 5 இடங்களையும் அ.தி.மு.க காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கூட்டணி 34 இடங்களையும் பிடித்தன. டெல்லியில் ஜனதா ஆட்சி வந்தபின் அடுத்து நடந்த சட்டமன்றத் தேர்தலில் எம்.ஜி.ஆர் காங்கிரசையும் கம்யூனிஸ்ட்டுகளையும் கழற்றிவிட்டார். மார்க்சிஸ்ட்டை சேர்த்துக் கொண்டார். காங்கிரஸ்,கம்யூனிஸ்ட்டுகள் ஓரணியாகவும் ஜனதா, தி.மு.க எல்லாம் தனித்தனி அணிகளாகவும் போட்டியிட்டன. தி.மு.கவுக்கு 48 இடமும் காங்கிரஸ் அணிக்கு 32 இடமும், ஜனதாவுக்கு 11 இடமும் அதிமுக அணிக்கு 144 இடங்களையும் மக்கள் கொடுத்தார்கள்.

எம்.ஜி.ஆர் ஜனதா ஆதரவாளராகி மத்தியில் சரண்சிங் அமைச்சரவையில் தன் இரு அமைச்சர்களை சேர்க்கவைத்தார். இதுவே அவருக்கு எதிராயிற்று. கலைஞர் கருணாநிதி 1980ல் ஜனதா கவிழ்ந்தபோது இந்திராவை ஆதரித்து, 'நேருவின் மகளே வருக, நிலையான ஆட்சி தருக'என்று வரவேற்று சர்க்காரியா கமிஷன் பரிந்துரைப்படி தன் மீது போடப்பட்ட வழக்குகளை திரும்பப் பெறச் செய்தார்.( இந்த கோரிக்கையை அவர் முன்னர் ஆதரித்த ஜனதா பிரதமர் மொரார்ஜி ஏற்கவில்லை.)

*1980ல் நடந்த மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் 20 இடங்களை வென்று பெரும் வெற்றியை அடைந்தது. நெருக்கடி நிலை மிசா கொடுமைகளையெல்லாம் மறந்துவிட்டு அதன் கூட்டாளியாக இருந்த தி.மு.கவும் 16 இடங்களைப் பெற்று லாபம் அடைந்தது. அ.தி.முகவுக்கு இரண்டே இடங்கள்.*

*இந்தக் களிப்பில் கலைஞர் கருணாநிதி, எம்.ஜி.ஆர் அரசுக்கெதிராக ஊழல் புகாரை எழுப்பி அதைக் கலைக்கவைத்தார். அப்படிச் செய்தது இந்திராவுக்கு எதிராகப் போயிற்று. மறு சட்டப் பேரவை தேர்தலில் எம்.ஜி.ஆர் இரு இடதுசாரி கட்சிகளையும் அணியில் சேர்த்துக்கொண்டார். எதிர்த்த தி.மு.க காங்கிரஸ் கூட்டணியில் தி.மு.கவுக்கு 37ம் காங்கிரசுக்கு 31ம் கிடைத்தன. அமோக வெற்றி பெற்ற எம்.ஜி.ஆரின் அ.தி.மு.க அணிக்கு மொத்தமாக 144ம் அதில் அ.தி.மு.கவுக்கு மட்டுமே 129ம் கிடைத்தன.*

*1974 முதல் 1989ல் எம்.ஜி.ஆர் மரணத்துக்குப் பின் அ.தி.மு.க இரண்டாகும்வரை தி.மு.க தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்கமுடியாத பலவீனத்தோடே இருந்து வந்திருக்கிறது. காமராஜரின் கடைசி காலத்திலும், அவருக்குப் பின்னும் காங்கிரஸ் 1991 வரை பெருமளவு பலவீனமாக இருக்கவில்லை. தனியேவும், எம்.ஜி.ஆருடன் சேர்ந்தும் பெரும் வெற்றிகளையே சந்தித்திருக்கிறது. தமிழக வாக்காளர்கள் மனதில் நெருக்கடி நிலை எந்த பெரிய பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்பதையே இந்த தொடர் நிகழ்வுகள் காட்டுகின்றன. தி.மு.கவானாலும், அ.தி.மு.கவானாலும் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியுடன் அணி சேரும்போது அதிக பலமும் லாபமும் பெற்று வந்திருக்கின்றன என்பதே தொண்ணூறுகள் வரையிலான நிலையாகும். 1984, 1989, 1991 ஆகிய மூன்று மக்களவை தேர்தல்களிலும் தமிழ்நாட்டில் காங்கிரஸ்- அ.தி.முக கூட்டணியே பெரும் வெற்றியை அடைந்திருக்கிறது. 1989ல் டெல்லியில் காங்கிரஸ் ஆட்சியை இழந்தாலும், தமிழகத்தில் அதை எதிர்த்த தி.மு.கவுக்கு ஒரு சீட் கூட கிடைக்கவில்லை. செல்வி ஜெயலலிதாவின் அரசியல் அதிகாரப் பிரவேசத்துக்குப் பிறகே நிலை மாறுகிறது. காங்கிரசை உடைத்து மூப்பனார் த.மா.க தொடங்கியபின்னரே காங்கிரஸ் திமுக கூட்டணி மறுபடியும் உருவாகிறது.*

*நெருக்கடி நிலைக்கு தமிழகத்தில் ஏன் மக்களிடம் பெரும் எதிர்ப்பு இருக்கவில்லை என்பதை உணர நெருக்கடிக்கு முந்தைய, பிந்தைய இந்த அரசியல் போக்குகளை அலசாமல் ஆராயாமல்*

விளங்கிக் கொள்ளவே முடியாது.

கடைசி கேள்வி: அண்மையில் அத்வானி சுட்டிக் காட்டியதைப் போல மறுபடியும் இந்தியாவில் இன்னொரு நெருக்கடி நிலை வரும் வாய்ப்பு இருக்கிறதா ?

சட்டப்படி அது எளிதானது இல்லை. 1977ல் ஜனதா ஆட்சி செய்த அரசியல் சட்டத் திருத்துப்படி மக்களவையிலும் மாநிலங்களவையிலும் மூன்றில் இரு பங்கு ஆதரவு இருந்தால்தான் நெருக்கடி நிலைப் பிரகடனம் செல்லுபடியாகும். எனவே சட்டப்படியான நெருக்கடி நிலைக்கு வாய்ப்பு குறைவு.

ஆனால் கடந்த 40 வருடங்களில் நடந்துள்ள மிக முக்கியமான சமூக அரசியல் மாற்றங்கள் இங்கே கவனிக்கப்படவேண்டும். சர்க்காரியா கமிஷன் 1976-77ல் சுட்டிக் காட்டியது போல ஐ.ஏ.எஸ் அதிகாரிகளில் சிலர் பயத்தாலோ, ஆசையாலோ அராஜகங்களுக்கும் ஊழலுக்கும் துணை நிற்கும் நிலை பல மடங்கு இந்தியாவில், தமிழகத்தில் அதிகரித்திருக்கிறது. எந்த பிரும்மாண்டமான ஊழலும் அதிகாரிகள் துணை இல்லாமல் சாத்தியமே இல்லை. அராஜகமும் அப்படித்தான்.

இவற்றை எதிர்க்கவேண்டிய பத்திரிகைகள், தொலைக்காட்சிகளின் நிலை 40 வருடங்களில் கடுமையாக மாறியிருக்கிறது. எழுபதுகளில் இருந்தது போல சுயேச்சையான மனநிலை உடைய பத்திரிகை உரிமையாளர்கள், இதழாளர்களின் எண்ணிக்கை இன்று கணிசமாகக் குறைவு. பெருகி வந்திருக்கக்கூடிய தொலைக்காட்சி தனியார் நிலையங்களின் பெரும்பாலானவை பெரு வணிக நிறுவனங்களின் பிடியிலும், அந்த நிறுவனங்கள் அரசின் ஆட்சியாளர்களின் அரவணைப்பிலும் இருக்கின்றன. இன்று தணிக்கை அதிகாரிக்கே வேலையில்லை. சுயதணிக்கையில் எல்லா ஊடகங்களும் ஈடுபட்டுள்ளன. இந்த சுயதணிக்கை என்பது மதிப்பீடுகள் சார்ந்தவை அல்ல. இருத்தல் சார்ந்தவை.

வேறெப்போதையும் விட இன்று, மக்களில் பெரும்பாலோரின் மனநிலை, கருணையுள்ள சர்வாதிகாரி என்ற முரண்பட்ட ஆளுமையை எதிர்பார்த்து ஏங்குவதாகவே வடிவமைக்கப்படுகிறது. அதன் வெளிப்பாடாகவே நரேந்திர மோடி, ஜெயலலிதா ஆகியோர் பற்றிய வெகுஜன பொதுப் புத்தியில் இருக்கும் ஆதரவுக் கருத்துகளைப் புரிந்துகொள்ளவேண்டும். இன்று நரேந்திர மோடி

அரசும் ஜெயலலிதா அரசும் மேற்கொள்ளும் பல நடவடிக்கைகள் நெருக்கடி அதிகாரம் சட்டப்படி இல்லாமலே எடுக்கப்படும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளாகும். ஆனால் அவற்றுக்கான எதிர்ப்பு உணர்ச்சிக்கு பதில் பெரும்பாலான மக்களிடையே அவற்றை வியந்து பாராட்டும் உணர்ச்சியே இருக்கிறது. முதலமைச்சரோ, பிரதமரோ, சர்வாதிகாரியாக இரும்புக் கரத்தோடும் நடந்து கொண்டு, இன்னொரு பக்கம் தங்கள் மீது அன்புடன் இலவசங்களை அள்ளி வீசும் கனிவான இதயம் கொண்டவர்களாகவும் இருப்பதையே இன்றைய பொதுப்புத்தி அவாவுகிறது. இது நெருக்கடி நிலை அமலில் இருப்பதை விட ஆபத்தான சமூகநிலைமையாகும்.

தொண்ணூறுகளுக்குப் பின் சமூகத்தில் அரசியலில், கலாசாரத்தில், ஊடகங்களில் வடிவமைக்கப்பட்டு வந்திருக்கும் பொதுப் புத்தியானது, எழுபதுகளின் பொதுப் புத்தியிலிருந்து கணிசமாக வேறுபட்டிருக்கிறது. தன்னை, தன் குடும்பத்தைத் தவிர வேறு எதைப் பற்றியும் கவலை கொள்ளாமல் இருப்பதில் எந்த குற்ற மனப்பான்மைக்கும் இடம் இல்லை என்ற மனநிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சூழலில் நெருக்கடி நிலைக் காலத்தைய நடவடிக்கைகள் போன்ற நடவடிக்கைகளுக்கு மக்கள் மனதை தயார் செய்ய ஆட்சியாளர்களுக்கு முன்பை விட சிரமம் குறைவு. இன்று மிசாவோ பொடாவோ கொண்டு வரப்பட்டால், அதை எதிர்த்து சிறைக்குச் செல்ல, அன்றைய மிசா, பொடா கைதிகளின் வாரிசுகளில் கூட எத்தனை பேர் தயாராக இருப்பார்கள் என்று சந்தேகப்படும் நிலைக்கு கட்சி அரசியலே மாறிவிட்டது.

1975-76 நெருக்கடி நிலையின் போது சில பத்திரிகைகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் அத்வானி சொன்னார்: “குனியச் சொன்னபோது அவர்கள் தவழவே தயாராக இருந்தார்கள்.” இன்று யாரையும் அரசாங்கங்கள் குனியச் சொல்லக் கூட தேவையற்ற நிலையே இருக்கிறது.

இதெல்லாம் இப்படி இல்லை என்று யாராவது சொன்னால் ஒப்புக் கொள்ள எனக்கும் ஆசைதான். ஆனால் அதெல்லாம் அப்படி இல்லையே....

*காலச்சுவடு ஆகஸ்ட் 2015*

# மரணம் முதல் மன்றம் வரை: கொஞ்சம் கேள்வி – பதில், கொஞ்சம் பதில் இல்லாத கேள்விகள்.

**சசிகலாவை ஏன் மக்கள் இவ்வளவு வெறுக்கிறார்கள்?**

*மக்கள் மனதில் சசிகலா பெரும்பாலும் ஜெயலலிதாவின் வீட்டு வேலைக்காரி பிம்பத்திலேயே இருக்கிறார். கடந்த 30 ஆண்டுகளில் ஜெயலலிதா அவரை உடன்பிறவா சகோதரி என்றெல்லாம் சொல்லியிருந்தாலும் பொதுப் புத்தியில் அது ஏறவில்லை. பொது வெளிகளில் ஜெயலலிதா தோன்றியபோதெல்லாம் அவருக்கு ஓரடி பின்னால் டச்-அப் கேர்ள் போல சசிகலா நின்ற தோற்றம்தான் பொது மனங்களில் பெரிதும் பதிவாகியிருக்கிறது. தவிர சசிகலாவின் 30 வருடப் பொது மௌனம் அந்த வேலைக்காரி பிம்பத்தை வலுப்படுத்தியிருக்கிறது. (எஜமானிதான் பேசுவார். வேலைக்காரி பின்னால் மௌனமாக நிற்பார்.) தவிர 'சகோதரி' சசிகலாவை இரு முறை வீட்டை விட்டு ஜெயா துரத்தியதை மக்கள் எப்படி*

*புரிந்துகொள்வார்கள் ? வேலைக்காரியைத்தான் துரத்தலாம். திரும்ப வேலைக்கு சேர்த்துக் கொள்ளலாம். சகோதரியை யாராவது துரத்துவார்களா? மாட்டார்கள் என்பதே பொதுப் புத்தியின் புரிதல். வேலைக்காரியாக இருந்தவர் தன் வரம்பு மீறி தன் குடும்பத்தாரை சேர்த்துவைத்துக் கொண்டு எஜமானி பெயரால் அட்டூழியங்கள் செய்து எஜமானிக்கு கெட்ட பெயரை ஏற்படுத்திவிட்டார் என்பதே சராசரி புரிதலாக இருக்கிறது. அதனால்தான் உச்ச நீதி மன்றம் இருவரையும் கிரிமினல் குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்த பின்னரும், 'அம்மா'வுக்குக் கெட்ட பெயர் வாங்கித்தந்தவர் சசி என்ற பார்வையே பெருவாரி மக்களிடம் இருக்கிறது. இந்த வெறுப்பை மருத்துவமனையில் என்ன நடந்தது என்ற மர்மம் அதிகப்படுத்தியிருக்கிறது.*

**ஆனால் 122 சட்ட மன்ற உறுப்பினர்கள் எப்படி சசிக்கு அவ்வளவு விஸ்வாசமாக இருக்கிறார்கள்?**

*காரணம் அவர்களுக்கு சசி ஜெயாவின் வேலைக்காரி அல்ல, கூட்டாளி என்பது நேரடியாக நன்றாக கடந்த 30 வருடங்களில் தெரியும் என்பதுதான். மக்கள் பார்வையில் வராத போயஸ் தோட்ட வீட்டில் அவர்கள் ஜெயாவுக்கு மட்டுமல்ல, சசிக்கும் சேர்த்தேதான் இடுப்புக்குக் கீழே வளைந்து வணக்கம் செலுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கான கட்சி, ஆட்சி உத்தரவுகள் பெரும்பாலான சமயங்களில் சசியால்தான் தெரிவிக்கப்பட்டன. பத்திரிகைகள் அவ்வப்போது இது பற்றி கடந்த 30 வருடங்களில் எழுதியிருந்தாலும், அது ஒரு பெரிய பிரச்சினையாக மீடியாவாலும் ஆக்கப்பட்டதில்லை. ஜெயாவின் அந்தரங்க செயலாளர் அந்தஸ்துடன் தங்கள் மீது ஜெயா சார்பில் அதிகாரம் செலுத்தும் உரிமையுடையவராகத்தான் சசியை அதி.மு.க அமைச்சர்கள் முதல் வட்டச் செயலாளர்கள் வரை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். பொது மக்களுக்குத்தான் இது தெரியவில்லை.*

**சசிகலா சரியான சிகிச்சை கொடுத்து ஜெயாவைக் காப்பாற்றாமல் சாகவிட்டுவிட்டார் என்று பலரும் கருதுகிறார்களே ? அதனால்தானே 70 நாள் சிகிச்சை காலத்தின் ஒரு புகைப்படத்தைக் கூட வெளியிடவில்லை?**

*சசிகலாவை ஒரு சட்ட விரோத சக்தியாக பார்க்கலாம். சட்டத்துக்கு அப்பாற்பட்டு செயல்பட்ட ஒரு சுயநல அதிகார மையமாகப் பார்க்கலாம். ஆனால் பல பாமரர்கள் பேசிக்*

*கொண்டிருப்பதைப் போல அவர் ஜெயாவைக் கொன்றுவிட்டார் என்றோ வேண்டுமென்றே சாக விட்டார் என்றோ கருத நியாயம் இல்லை என்பதே என் கருத்து. உண்மையில் ஜெயா அவருக்கும் அவர் குடும்பத்துக்கும் ஒரு பொன் முட்டையிடும் வாத்து. அவர்களுடைய ஊழலுக்கு கேடயம். எனவே ஜெயா உயிரோடு இருப்பதுதான் அவர்களுக்கு அதிக லாபகரமானது. புகைப்படம் வெளியிடாததற்குக் காரணம் ஜெயலலிதா ஒரு பிரபலமான நடிகையாகத் தொடங்கி செல்வாக்குள்ள தலைவியாக மலர்ந்தபோது அவருக்கு பெரிதும் உதவிய தோற்றப் பொலிவு என்ற பிம்பத்தைக் காப்பாற்றுவதற்கேயாகும். நரை கூடி கிழப் பருவம் எய்தி கூற்றுக்கிரையாகி மாயக் கூடிய தோற்றத்தில் அவரைக் காட்டினால் பிம்பம் தகர்ந்துபோகும். இதே காரணத்துக்காகத்தான் எம்.ஜி.ஆர் அப்போலோவில் இருந்த போதும் ஒரு படம் கூட வெளியிடப்படவில்லை. அவர் புரூக்ளின் மருத்துவமனையில் இருந்தபோதும் வெளியிடவில்லை. அப்போதைய தேர்தலுக்கு முன் தி.மு.க 'எம்.ஜி.ஆர் செத்துவிட்டார்; திரும்பமாட்டார்' என்று பிரசாரம் செய்யத் தொடங்கியதாலேயே படங்கள் வெளியிடப்பட்டன. இப்போதும் தேர்தல் நேரமாக இருந்திருந்தால், ஜெயாவுக்கு ஒப்பனை செய்து படம் வெளியிடப்பட்டிருக்கும்.*

**ஜெயாவின் சிகிச்சை காலத்திலேயே ஓ.பன்னீர்செல்வத்தை முதல்வராக்கியதை மக்கள் ஏற்றுக் கொண்டார்கள் அல்லவா? அவரை ராஜினாமா செய்யவைத்து சசியே முதல்வராக துடித்தது ஏன்?**

*மக்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்று சொல்வதை விட, அடுத்த இரு மாதங்களில் பன்னீர்செல்வம் செயல்பட்ட விதம் பெருமளவு மக்களுக்கு ஆறுதலாக இருந்தது. மக்களும் மீடியாவும் எளிதில் சந்திக்கக்கூடிய முதல்வராக பல்லாண்டுகளுக்குப் பின் ஒருவர் அமைந்ததாக அது கருதப்பட்டது. முதல் முறையாக அமைச்சர்கள் மக்களிடம் மீடியாவிடம் பேசத் தொடங்கினார்கள். ஒரு சிறு ஜன்னல் திறக்கப்பட்டதே தென்றல் சுகமாகத் தோன்றியது. ஆனால் உச்ச நீதிமன்ற தீர்ப்பு வந்து தான் சிறைக்குப் போய்விட்டால், கட்சி, ஆட்சி இரண்டுமே தன் கட்டுப்பாட்டை விட்டுப் போய்விடும் ஆபத்தை அறிந்திருந்தார் சசி. அதனால்தான் தீர்ப்பு வருவதற்கு முன்பே கட்சிப் பதவியை கையில் எடுத்தார். அடுத்து முதல்வர் பதவியையும் எடுக்க முயற்சித்தார். முதல்வரான பின்னர் சிறைக்கு*

செல்ல நேரிட்டாலும், ஜெயா பன்னீரை நியமித்ததைப் போல தான் ஒருவரை நியமித்துவிட்டு செல்வதை கட்சியும் மக்களும் எளிதாக ஏற்பார்கள் என்று அவர் நம்பியிருப்பார். கட்சி ஏற்பது இப்போதும் எளிதாகவே இருக்கிறது. மக்கள் ஏற்புதான் பன்னீரின் கலகத்தால் சசிக்கு சிக்கலாகிவிட்டது.

**'ங' போல வளைவதற்கு எடுத்துக் காட்டாக திகழ்ந்த பன்னீர் ஏன் திடீரென கலகம் செய்தார் ?**

தொடர்ந்து இன்னும் சில மாதங்கள் அவரை முதல்வராக வைத்திருந்துவிட்டு பின்னர் சசிகலா முதல்வராகியிருந்தால் பன்னீரே கூட எதிர்க்காமல் இருந்திருக்கக் கூடும். அவர் இப்போதும் அரை மனது அப்ரூவர்தான். ஜெயாவும் சசியும் கடந்த வருட இறுதியில் அவர் மீதும் நத்தம் விஸ்வநாதன் மீதும் எடுத்ததாக சொல்லப்படும் நடவடிக்கைகளும், சசி குடும்பத்தினர் அவரது சுயமரியாதையை அவமதிக்கும் விதத்தில் ('அடிமைகளுக்கும் சுயமரியாதை உண்டு') செயல்பட்டதாக கூறப்படும் செயல்களும் அவரை கலகம் செய்ய தள்ளியிருக்கலாம். எம்.ஜி.ஆருக்கும் கலைஞர் கருணாநிதிக்கும் இருந்த முரண்பாடுகள்தான் எம்.ஜி.ஆரைக் கலகம் செய்ய தூண்டின. அதே சமயம் அந்த முரண்பாடுகளை பயன்படுத்தி ஊக்குவிக்க அன்றைய டெல்லி இந்திரா காங்கிரஸ் அரசின் மோகன் குமாரமங்கலம் முதலானோர் செயல்பட்டதை நினைவுகூரவேண்டும். அன்று எம்.ஜி.ஆருக்கு இந்திரா காங்கிரஸ். இன்று பன்னீருக்கு பா.ஜ.க.

**இதனால் பா.ஜ.க அடைந்த லாபம்தான் என்ன ?**

சசிகலா அணி அரங்கேற்றிய கூவத்தூர் சிறைவாசப் படலம் நிகழாமல் இருந்திருந்தால் பா.ஜ.க பெரும் லாபம் அடைந்திருக்கும். பன்னீர்செல்வம் பெரும்பான்மை ஆதரவுடன் முதல்வராக நீடித்திருப்பார். அதையடுத்து எம்.பிகளும் முழுக்க அவர் அணிக்கே வந்திருப்பார்கள். எல்லாருமாக மத்தியில் இருக்கும் மோடி அரசின் புதிய அரணாக இருந்திருப்பார்கள். அடுத்து 2019ல் வரும் மக்களவைத் தேர்தல்களில் பா.ஜ.கவும் அ.தி.மு.கவும் கூட்டணி அமைத்து பா.ஜ.க தன் வாக்கு சதவிகிதத்தையும் இட எண்ணிக்கையையும் அதிகரிக்க முயற்சித்திருக்கும். கூவத்தூர் படலத்தினால் பன்னீர் முதல்வராகத் தொடர்வது அடிபட்டுவிட்டது. எப்போதுமே ஒரே ரேசில் நான்கைந்து குதிரைகள் மீது பெட் கட்டி வைக்கும் அணுகுமுறை உடைய கட்சி பா.ஜ.க. அதனால்

*இப்போதும் சசிகலா, பன்னீர், தீபா, ஸ்டாலின் என்று நான்கு குதிரைகள் மீதும் பா.ஜ.கவின் கண் இருக்கிறது.*

**கூவத்தூர் படலத்தை ஆளுநரோ பன்னீரோ அல்லது வேறு யாரோ தடுத்திருக்க முடியாதா ?**

*ஆளுநர் தடுத்திருக்க முடியும். ஆனால் அவர் முதல்வர் பன்னீர் என்ன செய்கிறார் என்று பார்க்க காத்திருந்தார். பன்னீரின் கட்டுப்பாட்டில் பாதி அரசும் காவல் துறையும் இருக்கவில்லை. எனவே அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தி.மு.க நினைத்திருந்தால் கூவத்தூரில் சிறை வைக்கப்பட்ட சபாநாயகரையும் எம்.எல். ஏக்களையும் மீட்க நெடும்பயணம் நடத்தியிருக்க முடியும். ஆனால் தி.மு.க சட்டமன்றத்தில் அ.தி.மு.க ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று நம்பி ஏமாந்தது. கூவத்தூர் நிகழ்வுகள் தமிழகத்துக்கு பெரும் அவமானம். சட்டமன்ற உறுப்பினர் வரலாற்றில் பெரும் களங்கம். எப்படிப்பட்டவர்களை நாம் தேர்ந்தெடுத்து அனுப்புகிறோம் என்று மக்கள் எண்ணிப் பார்த்து அவமானப்படவேண்டும்.*

**சட்டமன்றத்தில் எடப்பாடி பழனிச்சாமி வென்ற நம்பிக்கைத் தீர்மானம் செல்லாது என்று நீதிமன்றம் உத்தரவிடமுடியுமா?**

*அதற்கான அதிகாரம் நீதி மன்றத்துக்கு உண்டு. ஆனால் சட்டமன்ற நிகழ்வுகளைப் பார்க்கும்போது ஏதேனும் அபூர்வமான சட்ட நுட்பக் காரணத்தைக் காட்டித்தான் அதைச் செய்யமுடியும் என்று தோன்றுகிறது. பெரும்பாலும் வாய்ப்பில்லை. ஏனெனில் சட்டமன்றத்தில் சபாநாயகர் முதல்வர், எதிர்க்கட்சித்தலைவர், ஆளுங்கட்சியின் கலகக்காரர் அனைவருக்கும் பேச வாய்ப்பு தந்திருக்கிறார். எந்த அதிர்க்கட்சி தரப்பினரையும் பேச விடாமல் தடுத்தோ கூச்சலிட்டோ ஆளுங்கட்சியினர் நடந்துகொள்ளவே இல்லை. வரலாறு கண்டிராத அடக்கத்துடன் அமைதியாகவே இருந்திருக்கிறார்கள். எந்த எதிர்ப்பும் இல்லாத போது தி.மு. கவினர் சபாநாயகரை முற்றுகையிட்டு அமளி செய்து அவரைத் தள்ளி, நாற்காலிகளை உடைத்து ரகளை செய்ய ஒரு நியாயமும் இருக்கவில்லை. அவர்களுடைய தோழமை கட்சியான காங்கிரஸ் கூட அதில் பங்கேற்கவில்லை.*

**ரகசிய வாக்கெடுப்புக்கு மறுத்ததை எதிர்த்தது நியாயமில்லையா?**

*இல்லை. வாக்கெடுப்பு முறை என்பது சபாநாயகரின் முடிவுக்கு உட்பட்டது.கட்சி தாவல் சட்டம், கொறடா உத்தரவு எல்லாம்*

*இருக்கும்போது ரகசிய வாக்கெடுப்பு செய்யமுடியாது. யார் மாறி வாக்களித்தார்கள் என்பது தெரிந்தால்தான் கட்சி தாவல் சட்டத்தின் கீழும் கொறடா உத்தரவு மீறலுக்கும் நடவடிக்கை எடுக்க முடியும். எனவே பகிரங்க வாக்கெடுப்பே நடத்தியாகவேண்டும். அது தவிர வாக்கெடுப்பில் ரகசியம் என்பது சாதாரண மக்களுக்கு மட்டுமே தேவைப்படும் உரிமையாகும். அந்த உரிமையை எம். எல்.ஏக்கள், எம்.பிக்களுக்கு தரக் கூடாது என்பது என் கருத்து. நாம் தேர்ந்தெடுத்தவர்கள் ஒவ்வொரு பிரச்சினையிலும் என்ன நிலைப்பாடு எடுக்கிறார்கள் என்பது நமக்கு தெரிந்தாகவேண்டும். அது ரகசியமாக இருக்கக் கூடாது.*

**இப்போதைய அரசியல் சூழல் யாருக்கு சாதகமானது ?**

*நிச்சயம் மக்களுக்கு சாதகமானது அல்ல. தேர்தலில் வாக்களித்துவிட்டால் அடுத்த ஐந்து வருடங்களுக்கு நம் பிரதிநிதி மீது நமக்கு எந்த அதிகாரமும் கிடையாது என்பது இப்போதுதான் மக்களுக்குக் கொஞ்சம் கொஞ்சம் உறைக்க ஆரம்பித்திருக்கிறது. உடனடியாக தேர்தல் வந்தால் , அ.தி. மு.க ஓட்டு பிளவுபட்டால், 1988-89போல தி.மு.கவுக்கு லாபம் அதிகமாக இருக்கும். ஆனால் இப்போதுள்ள அ.தி.மு.க எம். எல்.ஏக்கள் அடுத்த நான்கரை வருடங்களுக்குத் தேர்தல் வராமல் பதவியையும் ஆட்சி சுகத்தையும் காப்பாற்றிக் கொள்ளவே விரும்புகிறார்கள். அதற்காக தொடர்ந்து சசிகலா அணியுடனே இருப்பார்கள். இடைத்தேர்தல் வரவிடாமல் இப்போதே தி.முக ஆட்சி அமைத்து தங்களுக்கும் பதவி கொடுக்கும் என்றால் ஒரு பெரும் தொகைக்கு விலை போக சிலர் தயாராக இருக்கலாம். ஆனால் அதற்கான வாய்ப்புகள் குறைவு. தி.மு.கவைப் பொறுத்த மட்டில் விரைவாக தேர்தல் வருவதே லாபகரமானது. அதற்காக தாங்களும் தோழமைக் கட்சிகளுமாக சேர்ந்து கூட்டாக எம். எல்.ஏ பதவிகளை ராஜினாமா செய்து சட்டமன்றக் கலைப்பை நிர்ப்பந்தப்படுத்த இடம் இருக்கிறது. அவ்வளவு பெரிய முடிவை ஸ்டாலின் எடுப்பாரா என்பது கேள்விக் குறிதான். உடனடி தேர்தல் பா.ஜ.கவுக்கு லாபகரமானதல்ல. தி.மு.க கூண்டோடு ராஜினாமா செய்தால் பா.ஜ.க ஆளுநர் ஆட்சியை ஓராண்டுக்கு விதித்துவிடும் ஆபத்து இருக்கிறது.*

**கமல்ஹாசன், அரவிந்த்சாமி, சித்தார்த், ,மாதவன் முதலிய நடிகர்கள் எல்லாரும் அரசியல் கருத்துகளை இப்போது சொல்ல ஆரம்பித்திருக்கிறார்களே?**

*ஜெயலலிதா ஆட்சி காலத்தில் பரவலாக இருந்த பய உணர்ச்சி சமூகம் முழுவதும் ஓரளவு நீங்கியிருப்பதே முதல் காரணம். ஜெயலலிதா, கலைஞர் கருணாநிதி என்ற இரு பெரும் ஆளுமைகள் அரசியல் ஆட்டத்தில் இனி இல்லை என்பது ஒரு பெரிய வெற்றிடத்தை உருவாக்கியிருப்பது இரண்டாவது காரணம். தி.மு.க, அ.தி.மு.க, காங்கிரஸ், பா.ஜ.க நான்குக்கும் மாற்றாக ஒரு சக்திக்கான வெற்றிடத்தை நிரப்ப இடதுசாரிகளும் தலித் அமைப்புகளும் தகுதியிருந்தும் செய்யத் தவறிவிட்டன. தொடர்ந்து இருந்துவரும் வெற்றிடம் இப்போது பெரிதும் உணரப்படுகிறது. நடிகர்களில் கமல்ஹாசன் நினைத்தால் இதைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். சகாயம், நீதியரசர் சந்துரு போல மக்கள் மதிப்புடைய பிரமுகர்களைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு பெண்களையும் இளைஞர்களையும் திரட்டி, வேறு எந்த அரசியல் கட்சியுடனும் கூட்டுவைக்காமல் ஒரு இயக்கத்தை டெல்லி ஆம் ஆத்மி போல அவர் நடத்தினால், உடனடியாக வரும் உள்ளாட்சித் தேர்தல்களிலும் 2019 மக்களவைத் தேர்தலிலும் அவர் கணிசமான இடத்தை அடைய வாய்ப்பிருக்கிறது. ரஜினியை விட கமல் அரசியலுக்கு வருவது மேல் என்று நான் நினைக்கிறேன்.*

**தீபா ?**

*இந்த கேள்வி பதில் பகுதியில் நாம் கதாநாயகன், கதாநாயகி, வில்லன், வில்லி, குணச் சித்திர நடிகர்கள் பற்றி மட்டுமே உரையாடுகிறோம். நகைச்சுவை நடிகர்களைப் பற்றி அல்ல.*

**பதில் தெரியாத கேள்விகள் என்ன ?**

*ஜெயாவும் சசியும் 1991 முதல் 1996 வரை அராஜகமும் ஊழலும் செய்து சொத்துக் குவித்த வழக்கில்தான் தீர்ப்பு வந்தது. அப்படியானால் 1996க்குப் பின்னர் 2017 வரை எந்த ஊழலும் அராஜகமும் சொத்துக் குவிப்பும் நடக்கவில்லையா ? அவற்றுக்கு எப்படி எப்போது நீதி ?*

**குன்ஹா, உச்ச நீதிமன்றதீர்ப்புகளில் ஜெயா சசிக்கு உடந்தையாக இருந்த பல அரசு அதிகாரிகள், அரசு வக்கீல்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. அவர்கள் மீது எப்போது நடவடிக்கை ?**

*தீர்ப்பின்படி கையகப்படுத்தப் படவேண்டிய ஜெயா-சசி சொத்துகள் எப்போது அரசால் கையகப்படுத்தப்படும் ? மிரட்டப்பட்டு வலுக் கட்டாயமாக விற்றவர்களான கங்கை அமரன், கொடநாடு உரிமையாளர் போன்றோருக்கு அவை திருப்பித்தரப்படுமா?*

***காலச்சுவடு மார்ச் 2017***